# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No. 97/2023

2025 –ம் ஆண்டு நவம்பர் மாதம் 06 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 06.11.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ஜெயசந்திரன் (PW–3) | வயது | : | 62/2025 |
| த/க பெயர் | : | திரு. சோமு | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | செல்லபிள்ளையார் கோடடம் | வட்டம் | : | மன்னார்குடி |

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. சாட்சியம் அளிக்க இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரப்பெற்றதா என்றால் இல்லை. வாதி அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான். எனது வீடும், வாதி நடராஜன் வீடும் பக்கத்து பக்கத்து வீடு என்றால் சரிதான். தாவா சொத்தானது பிரதிவாதி பெயரில்தான் குத்தகை பதிவு உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதியின் தகப்பனார் தாவா சொத்தை சாகுபடி செய்து வந்து அவரது காலத்திற்கு பின்னர் பிரதிவாதி சாகுபடி செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

2. வாதிக்கு பிரதிவாதியானவர் சரண்டர் பத்திரம் எழுதிக்கொடுத்த எந்தவித உரிமையும் இல்லாததால் வழக்கிற்காக சரண்டர் பத்திரம் எழுதிக்கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சரண்டர் பத்திரம் எழுதிக்கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தில் வாதி அனுபோகம் செய்து வருகிறார் என்றால் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.12 10:14:52 +0530

District Munsif
Mannargudi.